Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத ஷு புரட்டாதி மீ 30 உ செவ்வாய்க்கிழமை (16 - 10 - 1990) ஹிஜ்ரி 1411 ஏபி. அப். 26 ஒசை 231

## பதுங்கு குழியினுள் பிரசவம் பார்த்த டாக்டர்

(தீவுப்பகுதி)

வேலணையில் நேற்று பொம்மர் தாக்குதல் நடந்த வேளையில் வேலணை அரசினர் ஆஸ்பத்திரியில் பதுங்கு குழிக்குள் வைத்து பிரசவம் ஒன்று நடைபெற்றது. ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள உதவி அரசாங்க அதிபர் பணிமனை தாக்கப்பட்டவேளை இப்பிரசவத்தை இந்த ஆஸ்பத்திரி டாக்டர் ஆ. திருநாவுக்கரசு பதுங்கு குழிக்குள்

(4ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை மாவட்டத்தில்

# கட்டைபறிச்சான்; சூரன்கல் தாக்குதல்களில் 11 படை பலி!

## வாகனங்கள் அழிப்பு; பல நவீன ஆயுதங்கள் மீட்பு

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் நேற்று நடந்த இரு வேறு சம்பவங்களில் ஓர் இராணுவ அதிகாரி உட்பட பதினொரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஒரு ஜீப் வண்டி புலிகளால் தீவைத்துக் கொளுத்தப்பட்டதோடு ட்ரக் சேதமடைந்தது. பல நவீன ஆயுதங்கள் மீட்கப்பட்டன.

### கட்டைபறிச்சானில் அதிகாரி உட்பட 4 இராணுவம் பலி

இரண்டாவது தாக்குதல் சம்பவம் கட்டைபறிச்சானில் நடைபெற்றது. இச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: கட்டைபறிச்சான் முகாமில் இருந்து ஊர்ப் பக்கமாக ஜீப்பில் சென்ற இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதில் ஓர் அதிகாரி உட்பட நான்கு இராணுவத்தினர் கொல்லப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சூரன்கல் தாக்குதலில் 7படைபலி; ஆயுதங்கள் மீட்பு

அடுத்த சம்பவங்கள் பற்றி தெரியவருவதாவது; நேற்றுக் காலை 9.30 மணியளவில் சூரன்கல் இராணுவ முகாமில் இருந்து கற்குலிக்காமம் பக்கம் சென்று கொண்டிருந்த இராணுவத்தினர் மீது புலிகள் மேற்கொண்ட நிலக் கண்ணிவெடித் தாக்குதலில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## விமானக் குண்டு வீச்சுக்கு உ.அ. அதிபர் பணிமனை சேதம்

(தீவுப்பகுதி)

நேற்று மாலை மூன்று மணியளவில் இரு பொம்மர் விமானங்கள் திடீரென குண்டு வீச்சு நடாத்தியதில் வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனை முற்றாக அழிக்கப்பட்டு விட்டது.

நிவாரணப் பணிகள் மேற்கொண்டிருந்த வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு. நா. தனபாலசிங்கம், மற்றும் கிராமசேவை அலுவலர்கள் பணிமனை ஊழியர்கள் யாவரும் இக் குண்டு வீச்சிலிருந்து தெய்வாதீனமாக தப்பிக் கொண்டனர். முதலாவது குண்டொன்று மேற்படி பணிமனையின் முன்பாக வீழ்ந்து வெடித்தது. இரண்டாவது குண்டு போடப்படும் முன்பு அனைவரும் வெளியே தப்பித்துச் சென்றனர். இரண்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை சிறியரக படகு புலிகள் மன்னாரில்அழிப்பு

(மன்னார்)

மன்னார் கடற்பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் சிறியரக படகு ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தியதில் அப் படகு முற்றாக அழிக்கப்பட்டதுடன்,

அதில் இருந்த சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

நேற்றுமுன்தினம் தலைமன்னார் கடற்பகுதியில் மீன்பிடிக்கச்சென்ற மீனவர்களின்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இரு படையினர் கால்களை இழந்தனர்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட உன்னிச்சைப்பகுதியில் விடுதலைப்புலிகளின் மிதிவெடியில் சிக்கிய இருசிறிலங்கா இராணுவத்தினர் கால்களை இழந்துள்ளனர்.

நேற்று இப்பகுதியில் தேடுதல் நடத்திய இராணுவத்தினர் விடுதலைப்புலிகளால் ஏற்கனவே வைக்கப்பட்ட இம் மிதிவெடியில்அகப்பட்டு தமது கால்களைஇழந்துள்ளனர். (க)

## மேலும் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலிச் சந்தைப்பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை நான்காக அதிகரித்துள்ளது.

படு காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த திருமதி நாகரத்தினம் (வயது 55) என்பவரும் நேற்று மரணமடைந்ததைத் தொடர்ந்தே இத்தொகை அதிகரித்தது. (க)

## சண்டிலிப்பாயில் ஒருவர் காயம்

பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல் சண்டிலிப்பாய்ப் பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

நேற்றுக்காலைநடைபெற்ற இச் சம்பவத்தில் ஜெயராஜா (வயது 20) என்பவரே காயமடைந்துள்ளார். இவர் சிகிச்சைக்காக மானிப்பாய் போதனா மருத்துவமனைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க)

## பாடசாலைகள் சீராக இயங்க பூரண ஒத்துழைப்பு உண்டு

### விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தில் இயங்கக்கூடிய பாடசாலைகள் அனைத்தும் சீராக இயங்குவதற்கு நாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவோம். இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைமைச் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கைஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7,8 ஆம் வகுப்பிற்கு மேல் பாடசாலைகளில் வகுப்புக்கள் நடைபெறுவதை நாம் தடைசெய்துள்ளோம் என சிலர் செய்த விஷமப்பிரசாரத்தில் எதுவித உண்மையும் இல்லை.

(4ஆம் பக்கம் பார்க்க)

## புல்மோட்டை முகாம் மீது ஷெல் தாக்குதல்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை மாவட்டத்தில் உள்ள புல்மோட்டை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் கடும் ஷெல் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தை நடத்த மாநாட்டில் வற்புறுத்து

(மட்டக்களப்பு)

அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் யுத்தத்தை நிறுத்தி மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர வேண்டும் என்று மட்டக்களப்பு சமாதான மாநாட்டில் தமிழ், முஸ்லிம் பிரமுகர்கள் வற்புறுத்துகின்றனர்.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெற்ற சமாதானக்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்ட தமிழ், முஸ்லிம் சமய சமூகப் பிரமுகர்களும் சமாதானக்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் இளைஞர்கள் கைது; தமிழ்க்குழுக்கள் கவலை

(கொழும்பு)

கொழும்பில் தமிழ் இளைஞர்கள் பலரும் தராதரமற்ற வகையில் கண்மூடித்தனமாக கைதுசெய்யப்படுவதாக கூறப்படும் தகவல்கள், தமக்கு கவலை அளிப்பதாக இருக்கிறது என்று கொழும்பில்உள்ள தமிழ்க்குழுக்கள் தெரிவித்துள்ளன.

வன்னித் தொகுதியைச்சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரின் உதவியாளரும் கூடகைது செய்யப்பட்டுள்ளார் என்றும், அவர்களை இன்னமும் காணவில்லை என்றும் தமிழ்க்கட்சி ஒன்றின் பிரதிநிதி தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு வைத்ததாகச்

(4ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்திற்கு இன்று பகல் நேர மின் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டம் பூராகவும் இன்று பகல் மின்சார விநியோகம் செய்யப்பட உள்ளதாக வட மாகாண மின்சாரசபை பொறியியலாளர் திரு. எஸ். கந்தசாமி தெரிவித்தார்:

கடந்த நான்கு மாதங்களாக துண்டிக்கப்பட்டிருந்த மின் விநியோகம் மீண்டும் இன்று யாழ்நகருக்கும் வழங்கப்பட உள்ளது என்றும் அவர் கூறினார்.

இருந்தும் நேற்றுக் காலை ஒன்பது மணியளவில் தென்மராட்சிப் பகுதி பூராகவும் மின் வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த மின் விநியோகம் பக

(4ஆம் பக்கம் பார்க்க)

## இளம் பெண் காலை இழந்தார்

(பரந்தன்)

பரந்தனில் சிறிலங்கா இராணுவத்தினர் புதைத்து வைத்த மிதிவெடியில் அகப்பட்ட இளம் பெண் ஒருவர் தனது காலில் ஒன்றை இழந்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### போட்டோஸ்ரட்

தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகளையும், அடையாள அட்டைகளையும் கவர் இட்டு உடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளின்கட், 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட் யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில்) வேலை நேரம் தினமும் காலை 6மணி தொடக்கம் மாலை 6 மணி வரை (R/705

### ரதி வோச் வேக்ஸ்

ரதி வோச் வேக்ஸ் அன் ஸ்ரோர்ஸ் இல. 14 கஸ்தூரியார் வீதியில் இருந்து இல. 12 பொன்னையா லேன் ஆறு கால்மடம் ஆனைக்கோட்டையில் (பிடாரி கோயில் உப தபால் அலுவலகத்திற்கு அருகில்) இயங்கி வருகின்றது என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம். திருத்துதல் வேலையும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. (B-1459)

### சித்ராலயா ஸ்ருடியோ

சித்ராலயா நிறுவனத்தில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளை 351, கோவில் வீதி நல்லூர் (கம்பன் கோட்டம் முன்பாக) என்ற முகவரியில் காலை 9 மணி முதல் 12 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

மற்றும் மாலை 2 மணி முதல் 5 மணி வரை புகைப் படம் பிடிக்கப்படும்.

(B/ 1496)

### இடமாற்றம்
### பரீஸ் ரெக்ஸ்

105, அரசடிறோட், தட்டாதெரு பிறவுண் வீதி சந்திக்கு அருகாமையில் எமது ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதை எமது வாடிக்கையாளருக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம். (R-728)

---

# 45ஆம் நாள் நினைவஞ்சலி



## பஞ்சலிங்கம் தயானந்தன்
## (வீரவேங்கை சின்னஅக்காச்சி)

தாயின் மடியில்: 17. 11. 1975

தாயக மண்ணில்: 02. 09. 1990

நீர்வைதனை பாசத்தின் பிறப்பிடமாக – கொண்ட
சிரிக்க வைத்த சித்திரமே – சின்ன அக்காச்சி
ஈழ மண்ணை மீட்கப் புறப்பட்டாய்
உன் உயிர் சடுதியாய் பிரிந்ததுவே
உன்னுடன் பூத்து நிற்கும் மலர்களுக்கு - ஏன்
பதில் சொல்லாமல் சென்றாயோ
பால் மணம் மாறாத - உன்
திருமுகத்தை காணாது தயானந்தன் - நாம்
பரிதவித்து நிற்கின்றோம்
இறைவனடியில் மழலையாகி விட்ட - நீ
தினம் தினம் எம் மனதில் குடியிருப்பாய்

இன்று (16. 10. 1990) செவ்வாய்க்கிழமை 10-30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும், மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்படி உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்

"கந்தசாமி கோயிலடி" நீர்வேலி தெற்கு, நீர்வேலி. - குடும்பத்தினர்

(B/1504)

---

பாராட்டுத் திட்டம்

## கலந்துரையாடல்

இடம்: கைலாசபதி அரங்கு, யாழ். பல்கலைக்கழகம்

காலம்: (இன்று) 16-10-1990 காலை 10-00 மணி

அழைக்கப்படுவோர்: மாநகர சபை ஆணையாளர், நகரசபைச் செயலாளர், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள், பொறுப்பதிகாரிகள் பிரதேச சபைகள், சனசமூக நிலையங்களின் சம்மேளன. சமாஜங்களின் அங்கத்தவர், சகல சனசமூக நிலையங்களின் தலைவர்கள், செயலாளர்கள், உதவி விவசாயப் பணிப்பாளர், வன இலாகா அதிகாரி மற்றும் இதில் ஆர்வம் கொண்ட அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சு. டிவகலாலா
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
யாழ். மாவட்டம்

(B-1505)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 26 – 04 – 1929

மறைவு: 16 – 09 – 1990



## அமரர் திருமதி துரைசிங்கம் மகிழ்மலர்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட அன்புத் தெய்வமே, எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் இருந்தஅம்மாவே, நீங்கள் மறைந்தும் இன்றும் எங்கள் கண்முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகின்றீர்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமகன்
மருமக்கள், பேரப்பிள்ளை.

லோட்டன் றோட்,
மானிப்பாய் தெற்கு.

(R/738)

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## இராமலிங்கம் இரவீந்திரன்
## (கடாபி)

வீர ஜனனம்: 25 - 09 - 1968

வீர மரணம்: 16 - 10 - 1988



கடமை வீரனே கடாபி
கண்ணியம் தவறாத தியாகி
நாட்டினை மீட்டிட எண்ணி
நாடியே புலிப்படை சேர்ந்து
நாட்டினாய் புகழினை நாட்டில்
நாளில் மறந்திடலாமோ
காட்டிக் கொடுத்திடும் துரோகிக்
கயவர்கள் பதுங்கியே – உன்னை
வேட்டினை வைத்துமே கொன்றார்
வேகுதே நெஞ்சமே புண்ணாய்
எட்டி மிதித்து நடக்கிறோம்
எரிமலை யாகினோம் நாங்களும்
முட்டிப் பகைவரை மோதுவோம்
முடிவில் தமிழீழம் காணுவோம்.

இல. 254, தர்மபுரம்,
பரந்தன்.

தாய், தந்தை, அக்காமார்,
மருமக்கள், மைத்துனர்மார்,
நண்பர்கள்.


(R/739)

---

# விண்ணக வாழ்வில்
# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு: 25 – 04 – 1963

உதிர்வு: 25 – 04 – 1988



## பொன் சாள்ஸ் சிறிதரன் (கஜன்)

சீரியதொரு பந்தயத்தில் ஓடினேன்: ஓட்டத்தை முடித்துவிட்டேன். நல்வாழ்வின் பரிசான வெற்றி வாகை எனக்காக காத்திருக்கின்றது.

(2 திமோ. 4: 7–8)

மின்சார நிலைய வீதி,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மகள்
உற்றார், உறவினர்,

(R/730)

---


உங்கள் தற்போதைய உடனடித் தேவைகளுக்கு

- வீட்டு மின்னிணைப்புகள்
- பிளம்பிங் வேலைகள்
- வெல்டிங்
- மோட்டர் றிவைன்டிங்

மற்றும் சகல மின்சார வேலைகளும் சலுகை அடிப்படையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

## ஜெகஜோதி என்ஜினியறிங் வேக்ஸ்

41, பஜார் லேன், யாழ்ப்பாணம்.

பதிவு இல. 4376.

(B/1481)

## சிந்தனைக்கு

*மரம், வேர் வீழ்த்தப்பட்ட பின்பு, அதன் இலைகளுக்கு நீர் ஊற்றுவதால் என்ன பயன்*

\- ஜீன் ஜேக் ரூஸ்ஸோ


# ஈழநாதம்

31, வைமன்வீதி, யாழ்ப்பாணம். 16-10-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## இது தீர்வு தரப்போவதில்லை

இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை தொடர்பாக கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாடு ஆறு வருடங்களாகியும் எதுவித முடிவும் எடுக்க முடியாது நீண்டுகொண்டு செல்கின்றது. இனிமேலும் எவ்வளவுகாலம் சென்றாலும் எத்தனை தடவைகள் கூட்டப்பட்டாலும் சர்வகட்சி மாநாடுகள் தீர்மானங்கள் எடுக்கப் போவதில்லை.

பாராளுமன்ற ஜனநாயக நாடுகளில், குறிப்பாக மூன்றாம் உலக நாடுகளில் பிரச்சினைகளை மழுங்கடிக்கவும் பிற்போடவும் ஒரு யுக்தியாகவே சர்வகட்சி மாநாடுகள், வட்டமேசை மாநாடுகள் கூட்டப்படுவது வழக்கமாகும். இலங்கையிலும் 1984 இல் இருந்த நெருக்கடியிலும், இந்தியாவின் தலையீட்டாலும் சர்வகட்சி மாநாடு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.

சர்வகட்சி மாநாடுகள், வட்டமேசை மாநாடுகள் கூட்டப்படும்போது பிரச்சினைகளை இழுத்தடிப்பதற்கெனவே பிரச்சினையுடன் சம்பந்தப்படாத, தீவிர முரண்பாடு உடைய சக்திகளை அவற்றுள் உட்புகுத்துதல் வழக்கமாக நடைபெறும் அதேவேளை எதிர்த்தரப்பில் இருந்து (போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளில்) மிதவாதப் போக்குடையோரைத் தெரிவு செய்தலும் வழக்கமாகும். இந்த அடிப்படையிலேயே 1984 இன் ஆரம்பத்தில் கூட்டப்பட்ட சர்வகட்சி மாநாட்டில் பௌத்த சங்கத்தினர் நேரடியாகத் தொடர்புபடுத்தப்பட்டு அரசியலுக்குக்கொண்டுவரப்பட்டனர்.

இதேபோன்று காலத்திற்குக்காலம் தீவிர முரண்பாடுகள் கொண்ட சக்திகள் உட்புகுத்தப்பட்டன, அல்லது அரசாங்கத்தால் தீவிர முரண்பாடு கொண்ட சக்திகள் உருவாக்கப்பட்டன. அவ்வாறு உருவாக்கப்பட்டவர்களே முஸ்லிம் காங்கிரஸும், அவர்களுடன் கூடியவர்களும் ஆகும்.

முரண்பட்ட சக்திகள் புகுத்தப்பட்டது போன்றே, தமிழர் தரப்பில் இருந்து மிதவாத சக்தியான கூட்டணி தெரிவுசெய்யப்பட்டது. அன்றைய நிலையில் தமக்கு ஒரு அரசியற் பற்றுக்கோடு தேவை என இருந்த கூட்டணியும் அதைப் பற்றிக்கொண்டது. அதன் பின்னர் நிலையங்கள் மாறக் கொள்கைகள் மாறும் மூன்னாள் தமிழ் தீவிரவாதக் குழுக்களும் சர்வகட்சி மாநாட்டில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

அதேவேளை சர்வகட்சி மகாநாட்டில் சேர்ந்துகொண்ட முரண்பாடு உடைய கட்சிகளும், தமிழர் தரப்புக் கட்சிகளும் மக்கள் மத்தியில் கால் பதிக்க இயலாதவர்களாகும். இவர்கள் மக்களின் பிரதிநிதிகளாகவோ மக்களின் அபிலாசைகளைப் பிரதிபலிப்பவர்களாகவோ இல்லை என்பது நிருபிக்கப்பட்ட உண்மை. இவர்கள் தமது அபிலாசைகளைப் பேணுவதிலும், சொந்த நலனை நிறைவேற்றுவதிலுமே அக்கறை கொண்டவர்களாவர்.

இவை யாவற்றிற்கும் மேலாக இன்று இச்சக்திகளாலேயே சிறிதளவாயினும் உடன்பாட்டிற்கு வரக் கூடிய நிலையில் இல்லை. அரசாங்கம் உருவாக்கிய முரண்பட்ட சக்திகள், இன்று அரசாங்கம் விரும்பினும், வழிக்குக் கொண்டுவர முடியாத சக்திகளாக மாறிவிட்டன. இதிலிருந்துசர்வகட்சிமாநாட்டின் மூலம் தீர்வுஎன்பதைஎப் போதும்காணமுடியாது என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

உண்மையில் அரசாங்கம் இனப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமானால் திறந்த மனத்துடன் முன்னேற்றகரமான திட்டங்களை முன்வைக்கவேண்டும். தமிழரின் அடிப்படை உரிமைகள் அபிலாசைகள் என்பனவற்றை அங்கீகரிக்க வேண்டும்.

இவை யாவற்றிற்கும் மேலாக மக்களின் எண்ணங்களைப் பிரதிபலிப்பவர்கள் மக்களுக்குத் தலைமை தாங்குபவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும்.

இதை விடுத்து இடம்மாற நிறம் மாறும் பச்சோந்திகள் போன்று, நிலையம்மாற கொள்கைமாறும் குழுவினர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க உதவப் போவதில்லை.

அவர்களைக் கோடரிக்காம்புகளாகப் பயன்படுத்த அரசாங்கம் எண்ணியிருக்கலாம். ஆனால் கோடரிக் காம்புகளுக்கு முருங்கை மரங்கள் உதவாது என்பதை அரசாங்கம் இன்று உணர்ந்திருக்கும் என எண்ணுகிறோம்.

# தமிழரை அடித்துப் பணியவைக்கும் கொள்கை ஆட்டம் காண்கிறது

(நேற்றைய தொடர்ச்சி)

இந்தநிலையிலும் இராணுவ ரீதியிலான மேலாண்மையை நிலைநாட்டிப் பலப்படுத்திக் கொண்டு பேச்சுவார்த்தை மேசைக்கு விடுதலைப் புலிகளையும் இழுத்துவந்து தாம் விரும்புகின்ற ஒரு தீர்வைத் தமிழர்களின் தலையில் கட்டியடிப்பதுவே சிறிலங்கா அரசின் விருப்பமாக இருந்து வருகிறது. ஆனால் விடுதலைப் புலிகளிடமிருந்து இராணுவ மேலாண்மையை நிலைநாட்டுவது சிறிலங்காப் படைகளுக்கு இயலாத காரியமாகவே இருக்கிறது.

### இராணுவம் சந்திக்கும் இழப்பு

ஜூன் 11இல் இந்த யுத்தம் மூண்டதில் இருந்து சுமார் நான்குமாத காலப் பகுதியில் ஏறத்தாழ 1500 பேர் வரையில் படையினர் உயிரிழந்துள்ளனர். மேலும் 3000 பேர் வரையில் படுகாயமுற்று அங்கவீனர்களாகியுள்ளனர்.

இந்த எண்ணிக்கை உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டபோதும் உண்மையான ஆட்பல இழப்பு இதைவிட அதிகமாக இருக்கலாம். இந்த எண்ணிக்கையே சரியானதெனக் கொள்ளப்பட்டாலும்கூட கடந்த இரண்டரை ஆண்டுகாலப் போரில் இந்திய இராணுவம் சந்தித்ததாகச்சொல்லிக் கொண்டதை விட இந்த இழப்பு அதிகமானதாகும். மேலும் நுணுகிப் பார்த்தால் படையினர் நாளொன்றிற்குச் சராசரி 10 பேர் உயிரிழக்கவும், 20 பேர் அங்கவீனர்களாகவும் நேரிடுகின்றது. இதனால் நாளாந்தம் பராமரிப்புச் செலவுகளை விட மேலதிகமாக சுமார் முப்பது லட்சம் ரூபாவுக்கும் அதிகமான தொகை நட்டஈடாக அரசாங்கம் செலவு செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இத்தகைய இழப்பிற்கு மத்தியிலும் கிழக்கு மாகாணத்தை தமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்து விட்டதாக ரஞ்சன் விஜேரட்னா மார்பு தட்டிக் கொள்ளும் போதிலும்கூட விடுதலைப் புலிகளின் இறுக்கமான பிடி இன்னும் இருப்பதை அரசாங்கத்தினால் இலகுவில் மறுக்க முடியவில்லை. வட மாகாணத்திலோ என்றால் நிலைமை மிகவும் வேறுபட்டது. வன்னிப் பகுதியில் இருக்கும் இராணுவ முகாம்களுக்கு இடையில் தரைமார்க்கத் தொடர்பைத்தானும் ஏற்படுத்திட இதுவரை இயலவில்லை. குடாநாட்டினுள் இராணுவ முகாம்களிலிருந்து ஓரிரு அங்குலம்தானும் முன்னேற முடியாதநிலை ஒருபுறமிருக்க, கோட்டை போன்ற பலமான பாதுகாப்பு அரண்களைக்கூட காப்பாற்ற முடியாமல் கைவிட்டோட வேண்டியிருக்கின்றது.

அதாவது,சுருக்கமாகக் கூறினால் சிறிலங்காவின் இராணுவத் தலைமைப்பீடம் இப்போதுதான் ஒரு போரைச் சந்தித்துக் கொண்டுள்ளது. இராணுவ ரீதியான தோல்விகளை அனுபவிக்கத் தொடங்கியுள்ளது. இதன் காரணமாகவே அரச இராணுவ அதிகாரிகள் மத்தியில் அதிருப்திகளும், கருத்து மாறுபாடுகளும் மேலெழத் தொடங்கியிருக்கின்றன. இராணுவ

### இனியவன்

அதிகாரிகள் அடிக்கடி இடமாற்றம் பெறுவதாக வரும் செய்திகள் இதனையே ஊர்ஜிதம் செய்கிறது எனலாம். அத்துடன் இராணுவ அதிகாரிகளிடையே கருத்து மாறுபாடு 'வடக்கில் கடமை ஏற்கத் தயங்கிய இராணுவ அதிகாரி கைது' என்றவாறாக இடம்பெறும் செய்திகளும் இதனையே அம்பலப்படுத்துகின்றன எனக் கொள்ளலாம்,

இத்தருணத்தில்தான் சிறிலங்கா அரசு சூழ்ச்சிகரமான நோக்கங்களுடன் ஊர்காவற் படைகளை அமைக்க முன் வந்துள்ளது. இவ்வளவு காலமும் அரசாங்கத்தின் ஆயுதப் படைகளும், அவற்றின் அங்கீகாரம் பெற்றோரும் மட்டுமே ஆயுதங்களை வைத்திருக்க முடியும் என்றே அரசு கூறிவந்தது. ஏனைய ஆயுதங்கள் அனைத்தும் சட்டத்துக்குப் புறம்பானவை என்றும், அவற்றை வைத்திருப்போர் பயங்கரவாதிகள் என்றும் கூறி 'ஆயுதக் களைவு' நடவடிக்கையிலேயே தாம்ஈடுபட்டு வருவதாகப் பிரச்சாரம் செய்தது. ஆனால் இப்போது அரசாங்கமே 'ஆயுத விதைப்பு' நடாத்த முன் வந்துள்ளது.

இத்தகைய ஆயுத விதைப்பு படுகொலைக்களமாக நாட்டை மாற்றிவிடும் என்பது ஒரு புறமிருக்க இதனைச் செய்ய முயலும் அரசாங்கத்தின் சதி நோக்கிற்கு துணை போகும் சக்திகளினை அம்பலமாக்கவேண்டியுள்ளது.

முஸ்லிம்களைப் பாதுகாக்க முஸ்லிம் மக்களுக்கென ஒரு ஊர்காவற்படை, தமிழ்க் கிராமங்களைப் பாதுகாக்க தனியான ஊர்காவற்படை என்றவாறாக அமைக்கப்படுவதன் ஊடாக ஒரு சமூகத்திற்கு எதிராக மற்றச் சமூகத்தை தூண்டிவிடுகிறது சிறிலங்கா அரசு. (தேசிய ஒருமைப்பாட்டை இப்படித்தான் கட்டி வளர்க்க வேண்டும் போலும்). மேலும் இவ் விரு சாராரையும் கூட தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலனாக வளர்ச்சி கண்டுள்ள விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் பயன்படுத்துவதன் மூலம் தமிழரின் இராணுவ வலிமையை பலவீனமாக்கவும் முயற்சிக்கப்படுகின்றது. இவ்வாறான சக்திகளை விடுதலைப் புலிகளுடன் மோத வைப்பதன் மூலம் தனக்கு ஏற்படும் ஆட்பல இழப்பையும், பொருளாதார இழப்பையும் (நட்டஈடுவழங்குதல் மூலம்) தவிர்த்துக் கொள்ள சிறிலங்கா இராணுவம் பாடுபடுகின்றது.

எனவே தான் ஒட்டுமொத்தமாகச் சுருக்கிப் பார்ப்போமானால் சிறிலங்கா அரசு தமிழர்களின் தாயகப் பூமியில் தனது இராணுவ மேலாண்மையை இழந்து வருகின்றது என்பதையும், தமிழ் பேசும் மக்களின் நியாயமான அபிலாஷைகளை ஏற்றுக்கொள்ள இன்னும் தயாராக இல்லை என்பதையும், தமிழ் பேசும் மக்களைப் பிளவுபடுத்தி-கூறுபோட்டுப் பலவீனப்படுத்துவதையே தன் இலக்காகக் கொண்டிருக்கிறது என்பதையும் எவரும் உணர்ந்து கொள்ளமுடியும். எனவே தான் கிழக்கிலாயினும் சரி, வடக்கிலாயினும்சரி சிறிலங்கா அரசு அமைக்கப்போவதாகக் கூறும்ஊர்காவற்படையானது அரசின் கூலிப்படையாக மட்டுமே செயலில் இருக்கமுடியும் என்பதை ஊர்காவற்படைக்கு ஆள் திரட்டும் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

(முற்றும்)

### பாகிஸ்தானில்

# சுயேச்சையானதேர்தல்இல்லாவிடில் 60 கோடி ஆயுத உதவி நிறுத்தம்

### - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்

(லண்டன்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோவை வேட்பாளராகக் கொண்டு, நியாயமான சுயேச்சையான தேர்தல் நடத்தப்படா விட்டால் அந்நாட்டிற்கான 60 கோடி டாலர் ஆயுத உதவியை அமெரிக்கா நிறுத்திவிடும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

லண்டனில் வெளியாகும் ''ஒப்சேவர்'' பத்திரிகைக்கு பேட்டியளித்தபோதே அமெரிக்க ஜனாதிபதி இந்த எச்சரிக்கையினை விடுத்துள்ளார்.

பாகிஸ்தானில் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்ற ஐயப்பாடு எழுப்பப்பட்டிருப்பதனாலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் எல்லைப் பகுதியில் இந்திய இராணுவத்தின் அபாயம் இருப்பதாகவும், பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சி தேர்தலை சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாகவும் பாகிஸ்தானின் இராணுவ அதிகாரிகள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

இதனைக் காரணமாகக் கொண்டு தேர்தலை ஒத்திவைத்தால் அல்லது பாகிஸ்தான் மக்கள் கட்சியை தேர்தலில் நிற்கவிடாது இடைக்கால அரசு தடை செய்தால் அமெரிக்கா உதவி வழங்காது எனவும் அவர் தெரிவித்தார்.

## நெல்சன் மண்டேலாவிற்கு பாரத ரத்னா விருது

(டில்லி)

இந்தியாவிற்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தென் ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலாவிற்கு இந்தியாவின் உயர் விருதான 'பாரத ரத்னா' விருது வழங்கப்படவிருக்கின்றது.

ஐந்து நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டு நேற்று இந்தியா வந்து சேர்ந்த நெல்சன் மண்டேலாவிற்கு குதூகல மானவரவேற்புநடைபெற்றது

# நகர்ப்புறப் பாடசாலைகளில் மாணவர் வரவு மிகக் குறைவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பாடசாலைகள் யாவும் திட்டமிட்டபடி நேற்று ஆரம்பித்தன. வகுப்புகளுக்கு மிகவும் சொற்பஅளவு மாணவர்களே சமுகம் தந்திருந்தனர். கிராமப்புறப் பாடசாலைகளில் ஓரளவு மாணவர்கள் பாடசாலைக்கு வந்திருந்தனர். யாழ். நகரைப் பொறுத்தவரையில்ஒவ்வொரு பாடசாலைகளினது மொத்த மாணவர் தொகையிலும் பத்துவீதத்திற்கும் குறைவான மாணவர்களே சமுகமளித்திருந்தனர்.

யாழ். நகரில்மத்திய கல்லூரி வேம்படி மகளிர் கல்லூரி என்பவற்றிலும், யாழ். இந்துக் கல்லூரி, இந்து மகளிர் கல்லூரி, சென் ஜோன்ஸ், சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆகியவற்றில் மிகக்குறைவான மாணவர்கள் வந்திருந்தனர்.

ஆசிரியர்களின் வரவு ஓரளவு அதிகரித்து இருந்தபோதிலும் நேற்று எந்த பாடசாலையிலும் வகுப்புகள் ஆரம்பித்ததாகத் தெரியவில்லை.

நேற்றுமுன்தினம் குண்டுவீசப்பட்ட அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலையில் 28 ஆசிரியர்களில் பதினைந்துபேர் மட்டுமே சமுகந்த ந்திருந்தனர். எந்த மாணவர்களும் வரவில்லை. ஆசிரியர்கள் குண்டுவீச்சினால் சேதமடைந்த அப் பாடசாலையின்பிரதான மண்டபத்தை சுத்தம் செய்வதில் நேரத்தைக்கழித்தனர். (லோ)

## கேரதீவில் மக்களைவிட பொதிகளுக்கு முன்னுரிமை

(சரவகச்சேரி)

கேரதீவு சங்குப்பிட்டி ஜெற்றியூடாக பயணம் செய்யும் பொதுமக்கள் வள்ளங்களில் ஏற்றப்படாது லொறிகளில் கொண்டுவரப்படும் பொருட்களுக்கு முன்னுரிமை வழங்கி அவற்றை முதலில் ஏற்றிப் பறிக்கப்பட்டு வருவதாக கேரதீவு சங்குப்பிட்டி பயணிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேலும் வள்ளங்களில் பொதுமக்களை ஏற்றிப் பறிப்பதிலும் பார்க்க பெரியவாகன சொந்தக்காரர்களின்பொருட்களை ஏற்றி இறக்குவதனால் வாகன சொந்தக்காரர்கள் வள்ள ஓட்டுனர்களுக்கு கையூட்டு வழங்கி வருவதாகவும் இதனால் வள்ள ஓட்டுனர்கள் வாகனப் பொருட்களுக்கே முன்னுரிமை வழங்கி வருவதாகவும் கூறினர். (லோ)

## குருநகர் பகுதியில் மிகக்குறைவு

(குருநகர்)

குருநகர் பகுதியில்மாணவர்களின் வருகை மிகவும் குறைவாக இருந்தது. புனித சாள்ஸ் மகாவித்தியாலயம் 3 மாணவர்கள். சென். பற்றிக்ஸ் கல்லூரி 25 மாணவர்கள். சென். றோக் வருகைஇல்லை. சென். ஜேம்ஸ் மகாவித்தியாலயம் - மகளிர் பாடசாலை மாணவ மாணவிகள் வருகை இல்லை. திருக்குடும்பக் கன்னியர் மடம் - ஓ. எல். ஆர். பிள்ளைகள் வருகை தரவில்லை. (21)

## போதனா வைத்தியசாலையை யாழ் நகருக்கு மாற்றவற்புறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட திணைக்களத் தலைவர்கள் யாழ்.அரசாங்க அதிபர் அரச சார்பற்ற பொதுஸ்தாபனங்கள் ஆகியவற்றுக்கிடையிலான மாநாடு ஒன்று நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்றது .இந்த மாநாட்டில் யாழ்ப்பாண போதனாவைத்தியசாலையை மீண்டும் யாழ். நகருக்கு மாற்றுவது சம்பந்தமாக சில விவகாரங்கள் இடம்பெற்றன.

இந்த விவாதத்தில் சிலஅரச சார்பற்ற பொது ஸ்தாபனங்கள் கூடியவிரைவில் போதனா வைத்தியசாலையை பழைய இடத்துக்கு மாற்றப்பட வேண்டும் என வற்புறுத்தியுள்ளன. இதனால் இன்னும் ஓரிருவாரங்களில் யாழ். போதனா வைத்தியசாலை மீண்டும் பழைய இடத்தில் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனைஉறுதிப்படுத்தும்முகமாக நேற்று நடைபெற்ற ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதி ஒருவர் இன்னும் ஓரிரு வாரங்களில் யாழ். போதனா வைத்தியசாலையை மீண்டும்யாழ். நகருக்கு கொண்டுவருவதுபற்றிய சாத்தியக்கூறுகள் தென்படுவதாகக் கூறினார். (லோ)

---

புல்மோட்டை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சனிக்கிழமை இரவு 10-30 மணியளவில் நடத்தப்பட்ட இத்தாக்குதலில் இராணுவதரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகத் தெரிகிறது.

இத் தாக்குதலில் உயிரிழந்த படையினரின் சரியான எண்ணிக்கை இதுவரை தெரியவரவில்லை. (க)

---

கடற்படை

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகை கைப்பற்றுவதற்காக பின்தொடர்ந்து வந்த கடற்படைப் படகை விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தி முற்றாக அழித்துவிட்டு அதில் இருந்த ஜே. ஆர்.கைக்குண்டு 1, ஏ. கே. ரவைக்கூடு-2, எல். எம். ஜி. விங் 100 ஆகிய ஆயுதங்களையும் கைப்பற்றினர். (க)

---

கொழும்பில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டிருக்கும் 200 இளைஞர்களை விசேட பொலிஸ் குழு ஒன்று இன்னமும் விசாரித்துவருவதாக கூறப்படுகிறது.

அதேவேளை பாதுகாப்பு இணை அமைச்சர் றஞ்சன் விஜேரத்தினாவின் உத்தரவின்படி கொழும்பிலும் அதன் புற நகர்ப் பகுதிகளிலும் தேடுதல் நடைபெறுகிறது.

---

யாழ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லில் மட்டுமே வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கது

இதேவேளை யாழ். மாவட்டத்தில் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்பட்ட டிரான்ஸ்போமர் ஒயில்களுக்குப் பதிலாக ஐம்பது பரல் டிரான்ஸ்போமர் ஒயில் அடுத்து வரும் கப்பலில் அனுப்பி வைக்கப்படும் எனவும் தெரியவருகிறது. இதனைத் தொடர்ந்து மேலும் இந்த மின் விநியோகம் விரிவு படுத்தப்படும் எனவும் திரு. கந்தசாமி தெரிவித்தார். (லோ)

---

பேச்சுவார்த்தை

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரும் ஒரே குரலில் வற்புறுத்தினர்.

வர்த்தக வணிகத்துறை அமைச்சர் ஜனாப் ஏ. ஆர் மன்சூர்கூட்டியஇக்கூட்டத்தில் இலங்கை அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தம் நிறுத்தப்பட்டு இரு தரப்பினரும் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடித்து பேச்சுவார்த்தைநடத்த வேண்டும் என்ற கருத்தே ஏகமனதாகக் கூறப்பட்டது.

---

பாடசாலைகள்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகளில் அகதிகளாக தங்கியிருக்கும்மக்களுக்கு மாற்று இருப்பிட வசதிகள் செய்துவிட்டு பாடசாலைகளை இயங்கவைக்கலாம் என ஆலோசனை மட்டுமே நாம் கூறியிருந்தோம் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (க)

---

பதுங்கு குழியினுள்

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்துபிரசவத்தை நடத்தினார். கடந்த ஆவணிமாதம் 22ஆம் திகதியும் இப்பகுதியில் விமானத்தாக்குதல் நடாத்தப்பட்டவேளை ஒருபிரசவத்தையும் இந்த டாக்டர் பதுங்கு குழிக்குள் வைத்து நடாத்தினார். (15)

---

கட்டைபறிச்சானில்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். அவர்கள் சென்ற ஜீப்வண்டியும் புலிகளால் தீ வைத்துக்கொளுத்தப்பட்டது.

இத் தாக்குதலின்போது பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் வருமாறு.

203 பிஸ்டல்- 1 203 ஷெல் - 1, ரி - 56 -2 - 2, ரி-56 மகசீன் - 2, சீ செற் பிஸ்ரல்-1, ஐ. எம். ரவை - 60.

---

விமானக் குண்டு

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

டாவது குண்டு வீச்சில் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த கிராமசேவை அலுவலர் திரு. சோ. சுந்தரலிங்கம் என்பவரது கால் விரல்கள் துண்டிக்கப்பட்டன. இவர் அருகில் இருந்த வேலணை கிராமிய ஆஸ்பத்திரிக்கு அவசர சிகிச்சைக்காக எடுத்துச் செல்லப்பட்டார். முதலாவதாகப் போடப்பட்ட குண்டு பணிமனை மீது வீழ்ந்திருந்தால் இப் பணிமனையில் நின்ற அனைவருமே மாண்டிருப்பர்.

இச் சம்பவத்தில்பணிமனை முன்பாக நின்ற பல பனை மரங்கள் சேதமடைந்ததுடன் சில மரங்கள் முறிந்து வீழ்ந்தன. அருகில் உள்ள கட்டிடங்கள், ஆஸ்பத்திரி என்பனவும் இக்குண்டு வீச்சு அதிர்வினால் சேதமடைந்திருந்தன இராணுவ நடமாட்டத்திற்குப் பயந்திருந்த இப்பகுதி மக்கள் இக் குண்டு வீச்சின் பின்னர் அவ்விடங்களை விட்டு உடனடியாக இடம் பெயர்ந்து சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது. (15)

---


**தெளிவான போட்டோஸ்ரட் பிரதிகள்**

உடனுக்குடன் கொடுக்கப்படும்

ஸ்ரீகாந் புத்தகசாலை
நல்லூர் முன்பக்கம்

★ ★ ★

மக்மிலன் புத்தகசாலை
ஒழுங்கை (B/1508)


## மருந்துப் பொருட்கள் பெற அரச அதிபர் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் மருந்துச் சாலைகளும் மருத்துவ மனைகளும் தமக்குத் தேவையான உள்நாட்டில் பெற்றுக்கொள்ள முடியாத மருந்துப் பொருட்களின் பெயர்ப் பட்டியலை யாழ். அரச அதிபரிடம் சமர்ப்பிக்குமிடத்து அப் பட்டியலின்படி கொழும்பிலிருந்து பெற்றுத் தருவதற்கு அரச அதிபர் உடன்பட்டிருக்கிறார்.

யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவும் அத்தியாவசிய மருந்துப் பொருள் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் முகமாக தனியார் மருத்துவமனைகளுக்கு இந்தச் சலுகையை செய்து தருவது சம்பந்தமாக நேற்று யாழ். செயலகத்தில் நடைபெற்ற திணைக்கள தலைவர்களுக்கும் அரச அதிபருக்கும் இடையிலான மாநாட்டில் தீர்மானித்ததாக அவர் கூறினார். இந்த மருந்துப்பொருள்களின் விபரப்பட்டியல் தாம்பெற்றுக்கொள்ளப்பட்டதும் கப்பல் மூலம் அவற்றைப் பெற்றுத்தர உத்தேசித்திருப்பதாகவும் அவர் கூறினார். (லோ)

## ஐ. நா. தூதுக்குழுவில் கோபாலசாமி இல்லை

(டில்லி)

இந்திய மாநிலங்கள் அவையின் உறுப்பினர் திரு. வை. கோபாலசாமி அவர்கள் ஐ. நா. சபையின் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் இந்தியத் தூதுக் குழுவில் இடம் பெறவில்லை. இதற்கு தமிழீழப் போராட்டமும், விடுதலைப் புலிகளுடன் திரு. கோபாலசாமி கொண்டுள்ள நட்பும்தான் காரணம் என 14. 10. 90 தினமணிகதிர் செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ. நா. சபையின் 45ஆவது கூட்டத் தொடரில் எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக்குழு செல்கிறது. இக் குழுவில் தி. மு. க. சார்பாக திரு. பா. கிருட்டினன் இடம் பெற்றுள்ளார்.

திரு. வை. கோபாலசாமிதான் ஐ. நா. தூதுக்குழுவில் இடம்பெறுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் திரு. கோபாலசாமி ஐ. நா.வில் புலிகளுக்கு ஆதரவாக ஏதாவது பேசிவிடலாம் என்றும் இக் குழுவில் புலிகளின் தீவிர ஆதரவாளர் இடம் பெறுவதை இலங்கை வேறுவிதமாக அர்த்தப்படுத்தலாம் என்றும் அயலுறவுத்துறை அதிகாரிகள் கூறியதை அடுத்தே திரு. பா. இருட்டினன் பெயரை வெளியுறவு அமைச்சர் திரு. ஐ. கே. குஜ்ரால் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

## விசர் நாய் கடித்த 9பேரில் ஒருவர் மரணம்

(அளவெட்டி)

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் அளவெட்டிப் பகுதியில் ஜெயரட்ணம் என்பவரின் வளர்ப்பு நாய் அவரது குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் உட்பட ஒன்பது பேரை நாற்பத்தெட்டு மணி நேரத்துக்குள் கடித்தது.

பின்னர் அதற்கு விசர்நாய்க்குரிய குணாதிசயங்கள் காணப்பட்டதால் அயலவர்களால் அது அடித்துக் கொல்லப்பட்டது.

இந் நாய் கடித்தவர்களின் உடலில் பலத்த காயங்கள் ஏற்படுத்தாததனால் அவர்கள் சிகிச்சை பெறாது அதனை அலட்சியம் செய்திருந்தனர்.

இதில் கடிவாங்கியவர்களுள் ஒருவரான கனகரட்ணம் மாணிக்கவாசகர் (55) என்பவர் நேற்று முன்தினம் ஏற்பு வலி காரணமாக தெல்லிப்பளை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இவருடைய குண இயல்புகளில் மாற்றங்கள் காணப்பட்டதால் இவர் தனிமைப் படுத்தப்பட்டு வைத்தியம் செய்யப்பட்டபோது நேற்று அதிகாலை மரணமானார்.

இதனைத் தொடர்ந்து ஏனைய எட்டுப் பேரும் வைத்தியசாலைக்கு அழைக்கப்பட்டு மருத்துவ பரிசோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளனர். (ச)

## புற்று நோயாளர்களுக்கு கொழும்பு செல்ல ஒழுங்கு

புற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களும் போதனா வைத்திய சாலையில் பார்வையிடப்பட்டு கொழும்பில் சிகிச்சை பெற பரிந்துரைக்கப்பட்ட நோயாளர்களும் விசேட சிகிச்சைக்காக கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளார்கள் என மானிப்பாயில் தற்பொழுது இயங்கும் யாழ். போதனா வைத்திய சாலையின் பணிப்பாளர் செல்வி பூபா சண்முகம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் விசேட சிகிச்சைக்காக கொழும்பு செல்ல விரும்புபவர்கள் எதிர்வரும் வெள்ளி, ஞாயிறு, திங்கள் ஆகிய தினங்களில் சகலமருத்துவ சான்றிதழ்களுடன் நேரிலோ அல்லது நெருங்கிய உறவினர்கள் மூலமாகவோ விண்ணப்பத்தை தம்மிடம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவித்தார். (மு)

---

இளம் பெண்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முன்தினம் தண்ணீர் எடுப்பதற்காக சென்ற ரீற்றா கந்தசாமி (வயது 21) என்பவரே தனது வலது காலை இழந்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினர் இப்பகுதியில் இருந்து வெளியேறிய பின் இங்கு இவர்கள் குடிஏறி சுமார் ஒன்றரை மாதங்களாகின்றன என்பது குறிப்பிடத் தக்கது.

---

சூரன்கல்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏழு இராணுவத்தினர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர். இவர்கள் பிரயாணம் செய்தட்ரக் வண்டியும் முற்றாகச் சேதமடைந்தது.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் எவ். என். சி. - 1, எஸ். எம். ஜி. மகசீன் - 3, ரவை - 150, ரி-81 - 1, ரி 81 மகசீன் - 3, ரவை 150, ஜே. ஆர். கிரனைட் 3 என்பன கைப்பற்றப்பட்டன.

---

பலாலியில்

## விமானதாக்குதல்

நேற்றுக்காலை 7 மணி தொடக்கம் மாலைவரை தொடர்ச்சியாக பொம்மர் விமானத் தாக்குதல்களும், ஹெலிக்கப்டர் தாக்குதல்களும் பலாலி இராணுவ முகாமைச் சூழவுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டதாக அறியவருகிறது. இதேவேளை பலாலி முகாமிலிருந்து ஷெல் வீச்சுக்களும் இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1990-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது